TAMIL NADU LEGISLATURE
12 SEP 1973
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1970 ஜனவரி 24

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Market at Mylapore

* 65. Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Commissioner of Police, Madras has received representations that the market at Bazaar Street, Mylapore is unsafe from public point of view about the 3rd March, 1969; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) "கடைவீதித் தெரு" முழுவதிலும் அதனை அடுத்துள்ள தெருக்களிலும் காவலர்கள் முறையாகச் சுற்றி வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதன் மூலம் "கடைவீதித் தெருவிலும்" அதனை அடுத்துள்ள தெருக்களிலும் தமிழ்நாடு போக்குவரத்து விதிகளைச் சேர்ந்த "ஒருவழிப்" போக்குவரத்து விதியும் பிற விதிகளும் மீறப்படுவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

THIRU T. MARTIN: In Mylapore, just opposite the tank, on the southern side, we find the vegetable vendors are selling vegetables in the evening. May I request the Hon. Minister to state whether these vegetable vendors will be given places in Thannithurai market for doing their business in evening time?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதுசம்பந்தமாக அடிக்கடி புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. காவல் துறையினர் தக்க கவனம் எடுத்துக் கொள்ளுவார்கள்.

Railway Accidents Inquiry Committee

* 66 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether the views of the State Government had been sought for by the Railway Accidents Inquiry Committee that visited the State capital about the 10th December, 1968?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த அரசாங்கத்தின் சார்பில் அந்த விசாரணைக் குழுவிடம் கொடுக்கப்பட்ட கருத்துக்கள் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலந்து அவர்களுடைய கருத்துக்களையும் பெற்று குழுவிடம், சிக்னல் பாயின்ட்களில் பழுது ஏற்படாமல் அடிக்கடி கவனம் செலுத்த வேண்டும் எனவும், தவறு செய்யும் ஊழியர்கள் கண்டிப்பாகத் தண்டனைக்கு உள்ளாக வேண்டுமெனவும், ரயில்வே நிலைய வரம்புகளில் வேகக் கட்டுப்பாடு நிச்சயமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும், எஞ்சின் சீராக உள்ளது என்று அதிகாரிகள் அங்கீகரித்த பிறகே வண்டிகள் எடுக்கப்பட வேண்டுமென்பதும், ஊழியர்கள் வேலை நேரம் குறைக்கப்பட வேண்டுமென்பதும் நாம் அளித்த கருத்துக்களாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ரயில்வே தடங்களில் ஆட்கள் இல்லாத கேட்டுகள் (அன்மேன்டு கேட்ஸ்) இருப்பதால் பலபல விபத்துக்கள் ஏற்படுகின்றன. இது சம்பந்தமாக அரசாங்கம் அந்தக் குழுவிடம் எடுத்துக் கூறியதா ? ரயில்வே இலாகாவில் இருந்து அந்த இடங்களில் ஆட்களைப் போடாவிட்டாலும் இந்த அரசாங்கம் அந்தப் பகுதிகளில் ஆட்களைப் போட முன் வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அரசாங்கம் அதைப்பற்றி ஏற்கனவே சொல்லாமல் இருந்தாலும் இந்தக் கேள்வியின் மூலமாக ரயில்வே இலாகாவின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் என்று கருதுகிறேன்.

திரு. கே. விநாயகம் : இந்தச் சர்க்காரின் அனுபவத்தையொட்டி செய்யப்பட்ட சிபாரிசுகளில் எந்தெந்தச் சிபாரிசுகள் அமலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன ? இப்போது அதிலே திருப்திகரமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று அமைச்சரவை கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நம்முடைய கருத்துக்களைச் சொல்லி இருக்கிறோம். அவற்றில் எவற்றை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்று வகைப்படுத்திச் சொல்லாவிட்டாலும் அவைகளில் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

மதுராந்தகம் சப்-மாஜிஸ்ட்ரேட்

***67 வினா—திரு.** கரு. சிமைச்சாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகத்தில் 22—3—1969-ம் தேதி மதுராந்தகம் சப்-மாஜிஸ்ட்ரேட் பட்டப்பகலில் தாக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?